# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2024/1 - 2017 ජූනි මස 19 වැනි සඳුදා - 2017.06.19

*2024/1 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

**3 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் மேற்குறித்த கட்டளையின் கீழ் வெளியிடப்பட்ட அட்டவணையினை, இதனகத்துப் பின்னர் வந்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கின்றேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, யூன் 18.*

**அட்டவணை**

*2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அட்டவணை II இன் விடய இலக்கம் 1(உ) இற்கு உடனடுத்து கீழ்வரும் விடயத்தினை உட்புகுத்துவதன் மூலம்,*

| இல.<br>I | | விடயம்<br>II | உற்பத்தித் தீர்வை<br>III |
|---|---|---|---|
| 1 | (ஊ) | 2017.04.21 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் சுற்றறிக்கையின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பயன்படுத்தி முதலாவது வட மாகாண சபை உறுப்பினர் ஒருவரினால்,<br>உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வாகனமொன்றினைக் கொள்வனவு செய்யும் போது அல்லது இறக்குமதி செய்யும்போது | செலுத்தப்பட வேண்டியுள்ள தீர்வையின் 35% |

7- 70


1A – PG 3577 – 557 (2017/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

**கவனிக்க.**- 2023/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 2023/67 ஆகும்.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.